Date. 17.09.2025.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

**OS.27/2018**

**பி.வா.சா. 2**

**பெயர். திரு.அப்துல் மாலிக்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் மலேசியாவில் சுமார் 10 வருடமாக இருந்தேன். அதற்கு முன்பு நான் இங்குதான் விவசாயம் செய்து கொண்டிருந்தேன். நான் குத்தகைக்கு விட்டதாக சொன்ன சொத்துக்கள் தற்போது என்னிடம்தான் உள்ளதா என்றால், என்னிடம் தான் இருக்கிறது. அந்த சொத்தில் நான் தற்போது நெல் விவசாயம் செய்து வருகிறேன். தண்ணீர் வசதி உள்ளது. நான் போர் போட்டுள்ளேன். போர் போட்டு சுமார் 15 வருடம் ஆகிறது. எனக்கு ஒரு ஏக்கருக்கு ஒரு போகத்திற்கு சுமார் 40 மூட்டை நெல் விளையும் . எனக்கு வருடத்திற்கு சுமார் 100 முதல் 150 மூட்டைகள் நெல் குத்தகைக்கு கொடுப்பார். அது விளைச்சலுக்கு தக்கவாறு கொஞ்சம் ஏறும் அல்லது இறங்கும். எனக்கு வேறு தொழில் உள்ளதா? என்றால், நான் ஆட்டு வியாபாரம் செய்கிறேன். நான் வருமான வரி செலுத்துகிறேன் என்றால் இல்லை அந்த அளவுக்கு எனக்கு வருமானம் இல்லை. நான் ஆதிமூலம் என்பவருக்கு குத்தகைக்கு விடவில்லை. பாலு, ஐயப்பன் ஆகியோரிடம் தான் குத்தகைக்கு விட்டேன். நான் குத்தகை வாங்கியதற்கும், விற்றதற்கும் ஆதாரம் எதுவும் இல்லை என்று சொன்னால், நான் குத்தகை பாண்டு எழுதிக் கொடுத்துள்ளேன். அந்த பாண்டை நான் கொண்டு வந்துள்ளேன். அந்த சொத்தில் பாலு, ஐயப்பன் தான் பயிர் வைத்தார்கள். எனக்கு பாலு, ஐயப்பன் ஆகியோரின் குடும்பத்தை பற்றி எனக்கு தெரியும். அவர்களது தாத்தா காலத்தில் இருந்து எனக்கு தெரியும். பாலுவும், ஐயப்பனும், கார், ஜீப், வேன் போன்றவைகளை வைத்துள்ளார்களா என்றால், எனக்கு டிராக்டர் வைத்திருப்பது

மட்டும் தெரியும். மற்ற வாகனங்கள் வைத்துள்ளார்களா? என்று தெரியாது. என் சொத்து ஒரு ஏக்கருக்கு எவ்வளவு போகும் என்றால், சென்ட் சுமார் ரூ.50,000/- மதிப்பு போகும். நான் நெல் பயிரிட்டு ஒரு போகத்திற்கு 100 மூட்டை நெல் கொடுத்ததாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் குத்தகைக்கு கொடுத்ததாக சொல்லும் காலத்தில் அங்கு நெல்லே விளையாது என்று சொன்னால் சரியல்ல. ஏன் நிலத்தை அவர்கள் திருப்பி கொடுத்துவிட்டார்கள் என்றால், நான் வெளிநாட்டில் இருந்து திரும்பி வந்து விட்டதால், எனக்கு வேறு தொழில் இல்லை என்பதால் அதை திரும்பி வாங்கிக் கொண்டேன். திரும்பி வாங்கிக் கொண்டதற்கு நான் ஆவணம் எதையாவது எழுதி வாங்கிக் கொண்டேனா? என்றால் இல்லை. என் சொத்துக்களை நான் பாலு, ஐயப்பன் ஆகியோருக்கு குத்தகைக்கு விட்டதாகவும், அவர்கள் எனக்கு குத்தகை நெல் அளித்ததாகவும் நான் வழக்கிற்காக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது சொத்துக்களில் ஒருபோகத்திற்கு மேல் எதுவும் விளையாது என்று சொன்னால், சரியல்ல முப்போகமும் விளையும் நிலம். எனது சொத்துக்கள் சுமார் 4 முதல் 5 லட்சம் ஏக்கருக்கு போகாது என்று சொன்னால், சரியல்ல. எனது நிலம் சாலைக்கு மிக அருகில் உள்ளது. பாலு என்பவர் வெங்கடேசன் எம்.எல்.ஏ வின் பிஏ என்று சொன்னால், அது குறித்து எனக்கு தெரியாது. பாலு ஆளுங்கட்சியை சேர்ந்தவர் என்று சொன்னால், அது குறித்து எனக்கு தெரியாது. நான் பாலுவிற்கு வேண்டியவன் என்பதால், அவர் எம்எல்ஏவுக்கு பிஏ என்பதாலும், தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் அதே கட்சியை சேர்ந்தவன் என்றும், நானும் பாலுவும் மிகவும் நெருக்கமானவர்கள் என்றும் சொன்னால் சரியல்ல. நான் எந்த கட்சியும் சாராதவன்.

<u>மறு விசாரணை</u>

<u>இல்லை.</u>